1975 நவம்பர் 6]

குறுவைக்கு முன்னால் இதனை தேவையான அளவு அளிக்க, பிரச்சாரம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியைச் சொல்ல முடியும்.

திரு. க. உரொ. எட்மண்ட்: நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரவர்கள் தான் கூட்டுறவுத் துறையிலேயிருந்த போது, தன்னுடைய படம் வைக்கக்கூடாது என்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி நெல் விதையைப் பற்றியது. அவருடைய படத்தைப் பற்றியதல்ல.

விதை நெல்லின் விலை.

*** 222. வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதை நெல்லின் விலை குறைக்கப்பட வேண்டுமென கிழக்கு இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி மன்றம் அண்மையில் அரசை வேண்டியுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சிமன்றத்தில் இருந்து அரசுக்கு எந்தக் கோரிக்கையும் வரவில்லை. ஆனால், திருவாடானை பஞ்சாயத்து யூனியன் பெருந் தலைவர், காளையார் கோயில் பெருந் தலைவர் ஆகியோர் கோரி இருந்தார்கள். இப்பொழுது விற்கப்படுகின்ற நெல் விதை, லாப நோக்கம் இல்லாத விலைக்குத் தான் விற்கப்படுகிறது. அதை மேலும் குறைப்பதற்கில்லை.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இப்பொழுது ஒரு எக்கருக்கு ஏறக்குறைய 30 கிலோ நெல் தேவைப்படும். அதை இராமநாதபுரம் மாவட்டத்திலே கிழக்குப் பகுதியிலே மழை வந்தவுடனே விதைப்பார்கள். மறுபடியும் மழை வரும்போது திரும்ப விதைப்பார்கள். ஒரு கிலோ நெல் ரூ. 3-க்கு விற்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. நியாயமான விலை ஒரு கிலோவுக்கு ரூ. 1 தானிருக்க வேண்டும். விதையென்றால் ரூ. 1½ என்றிருக்கலாம். ஆகவே, அரசாங்கமே தேவையான விதைகளைத் தயார் பண்ணி, குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெல்லினுடைய விலை ஒரு கிலோ ரூ. 1 என்ற அளவுக்கு வருமானல் அது அவருடைய கட்சியின் கோரிக்கை நிறைவேறியதாகக் கருதப்படும் என்று சொன்னர்கள். இப்பொழுதே அவர்கள் சொல்கிருர்கள், ரூ. 1-க்கு விற்கப் படுகிறது என்று. ஆனல் விதையை அதே விலைக்கு விற்பது நல்லதும் அல்ல, சரியானதும் அல்ல. இப்பொழுது அரசாங்கத்திற்கு இலாப நட்டம் இல்லாத விலைக்கு விற்கிருேம். இதை விடக் குறைவாக விற்கத் தொடங்கினல் இந்த நெல்லெல்லாம் விதைக்கு உபயோகிக்கப்படாமல் அரிசியாக ஆக்கப்பட்டு வேறு காரியங்களுக்குப் பயன்படும். விதைக்குப் பயன்பட வேண்டு மென்ற நோக்கில் எந்தவித லாபமும் இல்லாமல் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, பொதுவாகவே, நெல்லுக்கும் விதைக்கும் உள்ள வித்தியாசம் அதிகமாகத்தா னிருக்கிறது. ஆனல், அமைச்சரவர்கள் சொல்வதைப் போல் சில குறிப்பிட்ட ஏரியாக்களில் இந்த நெல்லைக் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விதைகளை விற்கிருர்கள். அப்படிப்பட்ட நிலை ஏற்படும்போது சில தவறுகளும் ஏற்படு கின்றன. ஆகவே, அதைப் போக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: நெல் விதை தமிழகத் திலே உள்ள எல்லா அரசுக் கிடங்குகளிலும் (டெப்போக்களிலும்) லாப நட்ட மில்லாமல் விற்கப்படுகிறது.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இப்பொழுது நெல் ஒரு கிலோ ரூ. 3½-க்கு விற்கப்படுகிறது. கொடுக்கப்படுகிற விதை நெல்லிலும் 10 கிலோ வாங்கினல் ஏறக்குறைய 2 அல்லது 3 கிலோ பதராக இருக்கிறது. விதையை உற்பத்தி செய்கின்ற வர்கள் அதற்காகத் தனிப்பட்ட அக்கறை எடுத்து உற்பத்தி செய்யவில்லை. சில விவசாயிகளுடைய காடுகளிலே போடப் படுகிறது. அங்கிருந்து அறுத்து விற்கிருர்கள். கிலோ ரூ. 3½ என்பது அதிகமாக இருக்கிறது. அந்த விலையைக் குறைத்து,

1975 நவம்பர் 6]

அதே நேரத்தில் பதரில்லாமல் நல்ல விதையாகவும் கொடுக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நல்ல சிறந்த விதையாக இருக்கவேண்டுமென்பதற்காகத்தான் சான்றிதழ் (சர்ட்டிஃபிகேட்) முறை கையாளப்படுகிறது. நல்ல விதையாக இருக்குமானால் அதற்குச் சான்றிதழ் கொடுக்கப்படுகிறது. Seed Certification Scheme is in operation. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களோ அல்லது விவசாயிகளோ விதையை வாங்கும் போதே சான்றிதழ் கொடுக்கப்பட்ட விதைகளை வாங்குமாறு தலைவரவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்த விதை நெல்களைச் சரியான முறையிலே தயாரித்து அளிப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் ஏதாவது அரசாங்கம் செய்திருக்கிறதா? அல்லது விவசாயிகள் பொறுப்பிலே விட்டு, விதை நெல்லை எடுத்த பிறகு, அதனை அரசாங்கம் வாங்குகிறதா? சரியான திட்டத்தோடு அதனை உற்பத்தி செய்வதன் மூலமாக பலவகை நெல்கள் கலக்காமல் பார்த்துக்கொள்வதற்கும் உற்பத்தியை அதிகப்படுத்தவும் வாய்ப்பு ஏற்படும். அதில் எந்தப் பாதுகாப்பை அரசாங்கம் செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அதற்கு நான் ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. எஸ். வடிவேல்: போவைத் தலைவரவர்களே, விதை நெல் என்பதற்காகக் கொஞ்சம் கூடுதலாக வைத்து விற்றால் பாவாயில்லை. ஆனால் ஒன்றுக்கு மூன்று மடங்கு அதிகமாக விலை வைத்து விற்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டதற்கு, அரிசியாக ஆக்கி விற்று விடுவார்கள், ஆகவே அதிக விலைக்குக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது என்று சொன்னார்கள். விதைப்பண்டத்தை அப்படி வீணாக்க மாட்டார்கள் உழவுத் தொழிலில் உண்மையான நம்பிக்கை உள்ளவர்கள். எனவே விலை கொஞ்சம் கூடுதலாக வைத்து விற்பதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

[1975 நவம்பர் 6

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இலாபமும் இல்லாமல், நஷ்டமும் இல்லாமல் இருக்கும் விலைக்கு விற்கப்படுகிறது என்று ஏற்கனவே சொன்னேன். வாங்குகின்ற விலையைவிட மூன்று மடங்கு இருக்கும் என்று நான் கருத வில்லை. ஆனால் வாங்கும் விலையைவிட அதிகமாகத்தான் இருந்தாக வேண்டும். தரமானதா என்று பார்க்க வேண்டும், சான்றிதழ் கொடுக்க வேண்டும். சான்றிதழ் உள்ள விதை சற்று அதிக விலையானாலும்கூட அடக்க விலைக்கு விற்கப்படுகிறது என்ற உறுதியின் அடிப்படையில் பெற்றுக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிய கம்பு ரகம்.

*** 223 வினு—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

வீரிய ஒட்டுக் கம்பு எச்.பி. 3 என்ற ரகத்திற்குப் பதில் வேறு கம்பு ரகம் ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இது கம்பு ரகத்தைப் பற்றிய கேள்வி. புதிய எச். பி. 3 (New Hybrid Bajra-3) புதிய எச். பி. 5 (New Hybrid Bajra-5) இந்த இரண்டு ரகங்களும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவை. இவை மற்ற ரகங்களைவிட அதிக மகசூல் கொடுக்க வல்லவை. தேமல் நோய் (Downy mildew) இந்த ரகங்களை அதிகமாகத் தாக்குவதில்லை. தாக்குவதில்லை என்று சொல்லவில்லை, அதிக மாகத் தாக்குவதில்லை. மேலும், நோய்கள் தாக்காத ரகங்கள் உருவாக்குவதற்காக தீவிரமாக ஆராய்ச்சிகள் நடைபெறு கின்றன.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்த ரகத்தை மழை காலத்திலே பயிர் செய்வதா அல்லது கோடை காலத்தில் பயிர் செய்வதா? இதனால் அதிகப்படியாக எத்தனை குவிண்டால் வரும் ?